# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.4 /2018**

திரு. M. சண்முகம்,
59, பிள்ளையார் கோவில் வீதி எண்.1,
சௌரிபாளையம் (அ.நி),
கோயம்புத்தூர்–641 028. . . . . மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் /மாநகரம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத்,
கோயம்புத்தூர்–641 012. . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள்: 25.4.2018**

1. திரு. M. சண்முகம், சௌரிபாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் அவர்களின் 29.1.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.4/2018 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர், மின் இணைப்பு எண்.048–006–1431க்கு செல்லும் மின் வயர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது சம்பந்தமாக கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/மாநகரத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 15.12.2017 நாளிட்ட மனுவிற்கு 50 நாட்கள் ஆகியும் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை என்று தனது 29.1.2018 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பு சமர்பித்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 9.2.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. இதற்கிடையே எதிர் மனுதாரரான மேற்பார்வை பொறியாளர், கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் அவர்கள் தனது 22.3.2018 நாளிட்ட கடிதத்தில் மின் இணைப்பு எண்.048–006–1431 திருமதி J.மோகனா என்பவர் பெயரில் உள்ளதாகவும், மின் கம்பிகளின் தடம் மேல்முறையீட்டாளருக்கும் திருமதி J.மோகனா என்பவருக்கும் பாத்தியப்பட்ட 3 அடி அகலம் கொண்ட சிறிய வழித்தடத்தின் மூலம் செல்வதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மின் வயர்கள் மாற்றுவதற்கான விண்ணப்பம் எதுவும் பிரிவு அலுவலகத்தில் அளிக்கப்படவில்லை என்றும் சம்பந்தப்பட்ட மின் நுகர்வோரிடம் சமரசம் பேசியதன் பேரில் 14.2.2018 அன்று மின் இணைப்பு வயர்கள் மாற்றுவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டு அதற்குண்டான தொகையும் வசூலிக்கப்பட்டு 19.2.2018 அன்று மேல்முறையீட்டாளருக்கு எந்தவித இடையூறும் இல்லாத வகையில் மின்இணைப்பு மாற்றி அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

4. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 17.04.2018 நாளிட்ட மின் குறைதீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தன்னுடைய (மனு எண்.4/2018) மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக கடிதம் அளித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“29.1.2018 அன்று என்னால் தரப்பட்ட புகார் மனுவில் எனது பக்கத்து வீட்டில் உள்ள மின் இணைப்பு எண்.048–006–1431ன் மின்இணைப்பு ஒயர் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது எனவும், பாதுகாப்பு கருதி ஒயர்கள் மாற்றி அமைத்து தருமாறும் தெரிவித்திருந்தேன்.*

*கடந்த 19.2.2018 அன்று உதவி மின் பொறியாளர் /சௌரிபாளையம் அவர்களால் எனது பக்கத்து வீட்டு ஒயர்கள் பாதுகாப்பாக சரி செய்யப்பட்டுள்ளது.*

*ஆகையால் நான் வழங்கிய நான் வழங்கிய 29.1.2018 நாளிட்ட புகார் மனுவை தள்ளுபடி செய்யுமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இப்படிக்கு*
*ஒப்பம்/XX XX”*
*(சண்முகம்)*

6. மேல்முறையீட்டாளர், தனது 17.4.2018 நாளிட்ட கடிதத்தில் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்யுமாறு கோரியுள்ளார். எனவே, மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.4/2018 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. M. சண்முகம்,
59, பிள்ளையார் கோவில் வீதி எண்–1,
சௌரிபாளையம் (அ.நி),
கோயம்புத்தூர்–641 028.

2) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் /மாநகரம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
டாடாபாத், கோயம்புத்தூர்–641 012.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.